**புத்தளம் பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 பெப்வரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தம்பர் 28 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் புத்தளம் பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) நீர் நிரப்பி வாகனம் மற்றும் டிரக்டர் வண்டிகளின் திருத்தத்திற்காக செலுத்த வேண்டிய ரூபா. 1,417,800 அட்டுறு செலவினமாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் அலுவலக வளவு மற்றும் வியாபாரக் கட்டிடத் தொகுதியைச் சுற்றி சீமெந்துக் கல் பதிப்பதற்காகச் செலவிடப்பட்டிருந்த ரூபா 1,297,152 மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை.

(இ) மீளாய்வாண்டினுள் மூலதனமாக்கப்பட்ட ரூபா. 371,791 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் நன்கொடை பெறுவனவு மூலதன உதவியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதிக் கூற்றுக்களில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்கான ரூபா. 105,846 ஆன பெற வேண்டிய சம்பள மீள் நிரப்பல் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

04 கணக்கு விடயங்களுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணைகள் மற்றும் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே ரூபா 4,741,122 ஆன வேறுபாடு காணப்பட்டது.

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 12 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 71,813,947 ஆக இருந்ததுடன் அதில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 33,264,942 ஆக இருந்தது.

**(ஆ) செலுத்தவேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 06 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 37,691,245 ஆக இருந்ததுடன் அதில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்கொடுத்தோர் ரூபா 6,031,855 ஆக இருந்தது.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 231,592,590 கூட்டுத்தொகையான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசீலிக்க முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகளுடனான தொடர்பு | பெறுமதி (ரூபா) | இணங்காமை |
| --- | --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | (i) | 129(2)(அ)(ஊ) பிரிவுகள் | 32,379,359 | கிடைக்க வேண்டிய குத்தகை வாடகை, அனுமதிப்பத்திரக் கட்டணங்கள், நீதிமன்ற தண்டப்பணங்கள், முத்திரைக் கட்டணம் முற்பணம் மற்றும் சம்பள மீள்நிரப்பு ஆகியவற்றை உரிய முறையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. |
| | (ii) | 158 ஆம் பிரிவு | - | வீதவரி மற்றும் ஏக்கர் வரி நிலுவை என்பவற்றை அறவிடுவதற்காக வரி அறவிடுவோரின் அசையும் அசையாத சொத்துக்களை தடைசெய்து நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) | 159 ஆம் பிரிவு | 5,348,059 | சபை ஆதனங்களை வாடகைக்கு வழங்கியதன் பேரில் நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | | | |
| | (i) | இலக்கம் 2(I)(இ) மற்றும் இலக்கம் 3 விதிகள் | | மீளாய்வாண்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| | (ii) | இலக்கம் 66 விதி | | பிரதேச சபை சட்டத்தின் 150(4) இன் பிரகாரம் செயலாளர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (iii) | இலக்கம் 69 விதி | | பிரதேச சபை சட்டத்தின் 154(1) இன் பிரகாரம் காணி விற்பனைக்கான வரி தொடர்பான பதிவேடொன்று பீ.எஸ் 26 மாதிரியின் பிரகாரம் பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) | இலக்கம் 81 விதி | | முத்திரைக் கட்டணங்களை சபைக்கு பெற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் மாகாண சபையின் பிரதான செயலாளருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (v) | இலக்கம் 218 விதி | சபைக்குச் சொந்தமான சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்தம் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,499,271 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 24,446,633 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

வருடக் கணக்காக விளைவற்றுக் காணப்படும் ரூபா 42,055 ஆன மீதியொன்று காணப்படும் வங்கி நடைமுறைக் கணக்கு தொடர்பாக பொருத்தமான நடைமுறையொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2016 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 4,733 | 3,449 | 5,152 | 2,059 | 1,380 | 1,329 | 1,493 | 3,790 |
| (ii) | வாடகை | 14,050 | 9,115 | 8,261 | 1,106 | 8,400 | 6,705 | 7,200 | 4,497 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 1,500 | 1,278 | 1,278 | - | 5,005 | 3,221 | 3,221 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 23,560 | 1,684 | 1,684 | - | 29,130 | 873 | 873 | - |

குறிப்பு : சேகரிக்கப்பட்ட வருமானத்தில் ஆண்டின் பட்டியலிடப்பட்ட வருமானத்தின் அறவீடுகள் மற்றும் முன்னைய ஆண்டுகளின் நிலுவை வருமானத்தின் அறவீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

ஆண்டின் பட்டியலிடல் உடன் ஒப்பிடும் போது முன்னைய ஆண்டுகளின் வீதவரி மற்றும் நிலுவை வாடகை முறையே 71 சதவீதம் மற்றும் 61 சதவீதமாக இருந்தது.

**2.3.3 வீதவரி மற்றும் வரி**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) மீளாய்வாண்டின் போது நிலுவை வீதவரி சேகரிக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தி சபை தீர்மானமானத்தின் பேரில் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 115,443 ஆன தரகுப் பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை வீதவரி நிலுவை ரூபா 1,609,707 ஆக இருந்ததுடன் அதில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 816,009 ஆக இருந்தது.

**(ஆ) ஏக்கர் வரி**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 449,851 ஆன ஏக்கர் வரி மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் ரூபா 100,862 தொகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்துவரும் மீதியாக இருந்தது. 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை அதிகாரப்பிரதேசத்தில் கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு ஏக்கர் வரி அறவிடக்கூடிய காணிகளை இனங்காணுதல் மற்றும் ஏக்கர் வரி பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 வாடகை**

பதிவேடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கடை வாடகை ரூபா 1,095,094 ஆக இருந்தது. அதில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகள் ரூபா 87,318 மற்றும் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட மீரிகள் ரூபா 25,833 ஆக இருந்தது.நிலுவை தொகையை அறவிடுவதற்காக பொருத்தமான நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 8,676,109 மற்றும் முத்திரைக் கட்டணங்களாக 15,892,495 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

### 3.1 செயலாற்றல்

--------------------

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது உபயோக சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நல விவகாரங்கள், வசதிகள் மற்றும் நலன்கள் ஆகிய சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

----------------------

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 52 விடயங்களுக்கு உப உறுப்புரைகள் பிறப்பிக்கப்பட்டிருந்ததுடன் வீதிகள், பொதுச் சுகாதாரம் நன்புரி முறைமைகள் மற்றும் நீர் வழங்கல் மற்றும் நீர்க் கைத்தொழில் ஆகிய சேவைகள் வழங்குவதற்காக போதிலும், உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நிதி ஒதுக்கீடு செய்யப்படாமை**

-------------------------------------------------

தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த அபிவிருத்தித் திட்டத்திற்கமைவாக வருடாந்த பாதீட்டின் மூலம் நிதி ஒதுக்கப்படாமையினால் சிறுவர் பற்சுகாதார மற்றும் சுகாதார முகாம் நடாத்துதல், பாடசாலை செல்லாத மற்றும் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான கல்வியைப் பெற்றுக் கொடுத்தல், வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை வேலைத் திட்டங்கள், நகர மற்றும் சூழல் அழகுபடுத்தல், வாசிப்பு நிலையங்கள் மற்றும் நடமாடும் நூலக சேவைகளை அமுல்படுத்தல், பாதைகள் வர்த்தமானியில் வெளியிடுதல், குளக் கதவுகள் பாதுகாப்பு, உணவகங்களை தரப்படுத்தல் மற்றும் சரணாலயங்களின் உரிமை பொறுப்பேற்றல் ஆகியவற்றை மேற்கொள்ள முடியாமலிருந்தது.

**(இ) எதிர்பார்த்த வெளியீட்டுத் தரத்தினைக் கொண்டிருக்காமை**

-----------------------------------------------------------------------------------------------------

செயற்பாட்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 11 பல்வேறு செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக ரூபா. 940,000 மதிப்பிடப்பட்டிருந்த போதும் ரூபா. 820,000 பெறுமதியான 10 மதிப்பீட்டுத் திட்டங்கள் மொத்தமாக நிறைவேற்றப்படாது இருந்ததுடன், ரூபா. 120,000 மதிப்பீட்டில் ரூபா. 5,250 மாத்திரம் செலவிடப்பட்டு ஒரு வேலைத்திட்டம் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தது.

**(ஈ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

---

மீளாய்வாண்டில் செயற்படுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்டிருந்த பல்வகை செயற்பாடுகளின் கீழான 42 திட்டங்களில் 04 நிர்மாணங்கள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(உ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(i) மீளாண்வாண்டின் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் கொம்போஸ்ட் திட்டத்திற்காக ரூபா. 200,000 மற்றும் திண்மக் கழிவு முகாமைத்துவம் மற்றும் சுகாதார சேவைகளை வழங்குவதற்காக ரூபா. 100,000 நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதும் அத்திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை.

(ii) கழிவுத் தொட்டிகள் மற்றும் காபன் உரத் தொட்டிகள் வழங்குவதற்காக ரூபா. 80,000 நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதும் அச்செயற்றிட்டம் நிறைவேற்றப்படவில்லை.

(iii) மலசலக் கழிவுகளை அகற்றுவதற்கான பொருத்தமான இடமொன்று சபையினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(i) ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் சபை அறிந்து இருந்த போதிலும் அது தொடர்பாக வழிகாட்டலொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) 2017 யூலை 25 ஆந் திகதிய 2’2017 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 6.1 பந்தியின் கீழ் தற்போது செயற்படுத்தப்படும் செயற்திட்டங்கள் ஊடாக வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.2 <u>முகாமைத்துவ வினைத்திறனின்மை</u>**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியினுள் 12 தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய ரூபா. 581,272 இனை பொறுப்பானவர்களிடமிருந்து அறவிடுமாறு மாகாண அரச கணக்குகள் குழு 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் 13 ஆம் திகதி வேண்டுகோள் விடுத்திருந்த போதும், அவ்வேண்டுகோள் 2018 ஏப்ரல் வரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான பழைய 60 கடைகளின் மூலம் ரூபா. 1,095,094 நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் அதனுடன் தொடர்பான வாடகை ஒப்பந்தம் மற்றும் கோவைகள் காணாமல் போயிருந்தன. மேலும் அக் கடைகளில் 03 கடைகளுக்கான ரூபா. 77,491 வாடகை நிலுவையாக இருந்ததுடன் 04 தொடக்கம் 05 வருடங்கள் வரை கடைகளுக்கான வாடகை பட்டியல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மதுரங்குளிய தொடுவாவ பாதையில் அமைந்துள்ள ஒரு கடையினை ஒப்பந்தக்காரர் வாடகை செலுத்துவதைத் தவிர்த்து கடையின் உரிமையினை தனதாக்கிக் கொள்வதற்காக புத்தளம் மாவட்ட நீதிமன்றத்தில் தொடுத்திருந்த வழக்கிற்கு சபை சமூகமளிக்காததன் காரணமாக ஒப்பந்தக்காரருக்கு சார்பாக வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு எதிரான தகவல்களை முன்வைப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.3 மனித வள முகாமைத்துவம்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) சபையின் அனுமதிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 68ஆக இருந்த போதும் 2018 மார்ச் 28ஆம் திகதியன்று 111 பேர் சேவையில் ஈடுபட்டுள்ளதுடன் இதில் 29 பேர் 25/2014 இலக்க பொது நிர்வாக சுற்றுநிரூபத்தின் கீழ் நிரந்தரத் தன்மை வழங்கப்பட்ட ஊழியர்களாவர். சேவை ஒப்பந்தத்தின் பேரில் 18 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் 01 இரண்டாம் நிலை பதவி மற்றும் 08 ஆரம்ப நிலைப் பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டன. 21 வெளிவாரி/பதிலீட்டு பதவிகள் அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைக்கு மேலதிகமாக இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

(ஆ) கடந்த வருடங்களில் சேவையிலிருந்து இடை விலகிய, இடமாற்றம் பெற்றுச் சென்ற, உயிரிழந்த, ஓய்வு பெற்ற மற்றும் வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்ட 20 ஊழியர்களிடமிருந்து ரூபா 359,013 கடன் மீதி அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

### 3.4.1 பயன்படுத்தப்படாத மற்றும் விளைவற்ற சொத்துக்கள்

---

**பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.**

(அ) ரூபா 165,500 பெறுமதியான 2 நீர் பௌசர்கள் பயன்படுத்தப்படாமல் பிரதான அலுவலக வளவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2008 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 540,361 பெறுமதியான இயந்திர உபகரண இருப்பொன்று விளைவற்றுக் காணப்பட்டன.

## 3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

---

2017 செப்தம்பர் 07 ஆந் திகதி மேற்கொண்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது வாகன உதிரிப்பாகங்களில் ரூபா 95,680 ஆன பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது.

### 3.6 பெறுகைகள்

### 3.6.1 பெறுகைகள் திட்டம்

அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட 02 செலவின விடயங்களில் நிதி ஏற்பாட்டை மிகைத்து ரூபா 698,702 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் வசிக்கும் பொது மக்களின் நலன்களுக்காக மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட 56 விடயங்களின் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,070,000 தொகையான மொத்த நிதி ஏற்பாடுகளும் 100 சதவீதம் சேமிக்கப்பட்டோ அல்லது அல்லது வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன், அதற்குரிய சேவைகள் எதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) மூலதனச் செலவினங்களை மேற்கொள்வதற்காக ரூபா 81,300,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 57,709,553 சேமிக்கப்பட்டிருந்தது. அது மொத்த நிதிஏற்பாட்டில் 71 சதவீதமாக இருந்தது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகத்தின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) காணி மற்றும் கட்டிடங்கள் வருடாந்தம் கணிப்பீடு செய்யப்படாமை |
| | (ii) கணனி உபபாகங்கள் தொடர்பாக பதிவேடு பேணப்படாமை |

| | | |
|---|---|---|
| (ஆ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) பொது நலன்புரி நடவடிக்கைகள் நிறைவேற்றப்படாமை<br>(ii) நிதிஏற்பாடு அதிகளவில் சேமிக்கப்பட்டமை |
| (இ) | உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வு பரிசோதனை மேற்கொள்ளப்படாமை |
| (ஈ) | கடன்பட்டோர் கட்டுப்பாடு | பழைய கடன்மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (உ) | ஆளணி முகாமைத்துவம் | (i) வெற்றிடங்களை நிரப்பாமை<br>(ii) நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை |